திருவள்ளூர் மாவட்டம் திருமழிசை பகுதியில் அமைந்துள்ள இந்து அறநிலை துறை சார்ந்த ஜெகன்நாத பெருமாள் திருக்கோவிலில் தேர் திருவிழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு திருக்கோவில் தேரை பக்தர்களுடன் வடம் பிடித்து இழுத்துச் சென்று நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டு நினைவு பரிசுகள் மற்றும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ், திருமழிசை பேரூர் கழக செயலாளர் தி.வே.முனுசாமி, பேரூராட்சி மன்ற தலைவர் ஜெ.மகாதேவன், மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், உள்பட பலர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!... முதல் பக்கத் தொடர்ச்சி

செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் 'சென்னை சங்கமம்நம்ம ஊரு திரு விழா' கலை நிகழ்ச்சிகளை பொதுமக்கள் அதிக அளவில் கண்டுகளிக்கும் வண்ணம் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், வேலூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள மின்னணு வீடியோ வாகனங்கள் சென்னைக்கு வர வழைக்கப்பட்டு, சென்னையில் மெரினா கடற்கரை, கோயம்பேடு - சென்னை புறநகர் பேருந்து நிலையம், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் 13.1.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த நிகழ்ச்சியையும், 14.1.2025 அன்றைய கலை நிகழ்ச்சிகளையும் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, செய்தி மக்கள் தொடர்பு துறையின் மின்னணு வீடியோ வாகனங்கள் மூலம் 15.1.2015 முதல் 17.1.2025 வரை மூன்று நாட்கள் நடைபெறும் 'சென்னை சங்கமம் நம்ம ஊரு திரு விழா' கலை நிகழ்ச்சிகளை சென்னையில் மெரினா கடற்கரை, கோயம்பேடு - சென்னை புறநகர் பேருந்து நிலையம், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் சென்னை சங்கமம்நம்ம ஊரு திரு விழா" கலை நிகழ்ச்சிகளை செய்தி மக்கள் தொடர்பு துறையின் மின்னணு வீடியோ வாகனங்கள் மூலம் மேற்கண்ட இடங்களில் நேரடியாக கண்டு களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குவைத் தி.மு.க. அயலக அணி சார்பாக

மிக இளம் வயது உலக சதுரங்க சாம்பியன் சர்வாணிகாவுக்கு 'இளம் சாதனையாளர்' விருது!

சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் வழங்கப்பட்டது!

குவைத், ஜன. 17-

குவைத் நாட்டில் உலக சதுரங்க சாம்பியன் சர்வாணிகாவுக்கு தி.மு.க., அயலக அணி சார்பில் "இளம் சாதனையாளர்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

குவைத் நாட்டில் நடைபெறுகின்ற மாபெரும் FIDE RATED OPEN CHESS TOURNAMENT களில் ஆசியாவின் மிக இளம் வயது WOMEN CANDIDATE MASTER, உலக சதுரங்க சாம்பியன் அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் ஆசியாவின் மிக இளம் வயது WCM சர்வாணிகா (வயது9) இந்தியா சார்பில் வயது வரம்பற்றோர் பிரிவில் கலந்து கொண்டு விளையாட குவைத் நாட்டிற்கு வந்துள்ளார்.

இதற்கு முன்னதாக பிரான்ஸ் நாட்டில் புதிய சாதனை படைத்து சதுரங்க வரலாற்றில் புதிய மைல் கல்லை எட்டினார் சர்வாணிகா. பிரான்ஸ் நாட்டில் Annemasseயில் நடைபெற்ற மாபெரும் FIDE RATED OPEN சதுரங்க போட்டிகளில், இந்தியா சார்பில் விளையாடி 43 (POINTS) புள்ளிகளைப் பெற்று மிக இளம் வயதில் 2049 (Elo Points) புள்ளிகளை சேர்த்து சர்வாணிகா புதிய சாதனை படைத்துள்ளார்.

மேலும் இந்தியாவில் GM வைஷாலி 12 வயதிலும், IM&WGM வன்டிகாஅகர்வால் 12 வயதிலும், IM&WGM திவ்யா தேஷ்முக் 11 வயதிலும் 2000 புள்ளிகளை கடந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுமி சர்வாணிகாவை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கிணங்க, கழக அயலக அணியின் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி. எம்.பி. செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா. எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி நமது கழக அயலக அணி சார்பில் நேரில் சந்தித்து இளம் வயதில் பல சாதனைகள் புரிந்து வரும் சர்வாணிகாவுக்கு திமுக அயலக அணி குவைத் சார்பாக திமுக அயலக அணியின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் " இளம் சாதனையாளர் " எனும் விருது வழங்கிய சிறப்பிக்க ப்பட்டது.

அப்போது பேசிய சிறுமி சர்வாணிகா தன்னை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் அழைத்து பாராட்டியதை நினைவு கூர்ந்து பெருமிதம் கொண்டார். மேலும் தனது வெற்றிக்கு மிகவும் உறுதுணையாய் இருப்பது தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் "திராவிட மாடல் அரசு" என்றும், தான் ஒவ்வொரு முறை வெற்றி பெற்று செல்லும்போதும் தமிழகத்தின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தன்னை பாராட்டி தனக்கு எப்பொழுதும் உறுதுணையாய் இருக்கின்றார் என்று மகிழ்வுடன் கூறினார்.

மேலும் தான் வெற்றி பெறும் போதெல்லாம் தமிழ்நாடு அரசு தனக்கு செய்யும் உதவிகளையும் நினைவு கூர்ந்தார். சதுரங்க போட்டி மட்டுமல்லாது படிப்பிலும் தான் சுட்டி ஒவ்வொரு தேர்விலும் முதல் மதிப்பெண் எடுத்து வருகிறேன் என பெருமையுடன் கூறினார். அது சமயம் அவரது தாயார் திருமதி அன்பு ரோஜா சரவணன் அவர்களும் உடன் இருந்தார்.

இந்நிகழ்வில் திமுக அயலக அணி குவைத் மண்டலத்தின் அவைத்தலைவர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, கிழக்கு மண்டல அமைப்பாளர் குடந்தை சி. தியாகராஜன், தொழிலாளர் நல அணி செயலாளர் திருவிடத்தினூர் ஏ.எஸ்.முகமது ரபிக், இளைஞரணி துணைச் செயலாளர் உளுந்தூர் பேட்டை சு. வெங்கடேசன், பொறியாளர் அணி செயலாளர் மருதூர் பிரேம்குமார், மகளிர் அணி து.செயலாளர் தஞ்சை சாந்தி பாலசுப்பிரமணியன், திருச்சி சௌமியா சுரேஷ்குமார். உடையார்பாளையம் செந்தில்குமார், கூத்தாநல்லூர் சாகுல் ஹமீது ஆகியோர் கலந்து கொண்டனர்.

100 பத்திரப் பதிவு அலுவலகங்களில்

18 ஆம் தேதி முன்பதிவு செய்ய கூடுதல் வில்லைகள்!

பத்திரப்பதிவு துறை அறிவிப்பு

சென்னை, ஜன.17-

18.01.2025 அன்று ஒரு நாள் மட்டும் 100 சார்பதிவாளர் அலுவலங்களுக்கு செயல்டுவதிலிருந்து விலக்கு அளித்து விடுமுறையும், 20.01.2025 அன்று பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்தும் அறிவிக்கப்பட்டுள்ளது

தமிழ்நாடு அரசு பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் பொங்கல் பண்டிகையினை தங்களுடைய குடும்பத்துடன் கொண்டாடும் விதமாக 14.01.2025 முதல் 16.01.2025 வரை தொடர் அரசு விடுமுறை உள்ள நிலையில், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்களின் 17.01.2025 அன்று வெள்ளிகிழமை விடுமுறை அளிக்க கோரிக்கை பெறப்பட்டதின் அடிப்படையில் அக்கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு முதல்மைச்சர் அவர்கள் மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு பணியாளர்கள் தங்களது சொந்த ஊர் சென்று பொங்கல் பண்டிகையை கொண்டாடும் வகையில், 17.01.2025 (வெள்ளிகிழமை) அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு அலுவலங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அளித்தும், அவ்விடுமுறையினை ஈடு செய்யும் வகையில் 25.01.2025 (சனிக்கிழமை) அன்று பணி நாளாக அறிவித்தும் உத்திரவிட்பட்டுள்ளது.

எனவே, மேலே குறிப்பிட்டுள்ளபடி 17.01.2025 வரை தொடர் விடுமுறை உள்ள நிலையில் அதன்பின் வரும் 18.01.2025 அன்று சனிகிழமையில் செயல்படும் 100 சார்பதிவாளர் அலுவலங்களுக்கு 18.01.2025 அன்று ஒருநாள் மட்டும் செயல்படுவதிலிருந்து விலக்கு அளித்து விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தை மாதத்தின் முதல் வேலை நாளான 20.01.2025 அன்று சுபமுகூர்த்த தினமாக உள்ளதால், அன்று அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இதனை ஏற்று, 20.01.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும், அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரன முன்பதிவு வில்லைகளோடு ஏற்கனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளோடு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.58, தாக்கர் தெருவில் பகுதி கழகத் தோழர்களும் தாக்கர் தெரு குடியிருப்புவாசிகளும் இணைந்து பொங்கல் திருநாளன்று நடத்திய தமிழ்ப் புத்தாண்டு மற்றும் சமத்துவப் பொங்கல் விழாவில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, அவ்விழாவையொட்டி நடத்தப் பெற்ற கோலப் போட்டி, விளையாட்டுப் போட்டி, அறிவுத்திறன் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்குக் குடம், விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பரிசுப் பொருட்களை வழங்கினார்.

இதுவரை ரூ. 6 கோடியே 15 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது

2012 சூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தியும் வழங்கப்படுகிறது.

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக

இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ.6 கோடியே 15 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 16-01-2025 அன்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

நிதி உதவி பெறுவோர் விவரம்

1.	பழனிவேல், தாழம்பட்டு, மாளிகம்பட்டு அஞ்சல், பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.	25,000/-
2.	மாதவரம் எம்.பி.நடராசன், பொன்னியம்மன்மேடு, சென்னை.	25,000/-
3.	ஆர். அண்ணாமலை, திரியாலம் அஞ்சல், திருப்பத்தூர் மாவட்டம்.	25,000/-
4.	செல்லப்பன், அருகாவூர் அஞ்சல், பெரும்பள்ளம், திருவண்ணாமலை மாவட்டம்	25,000/-
5.	எஸ்.இராமதாஸ், நெடிமோழியனூர், மயிலம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்	25,000/-
6.	இருசன், காட்டுக்கொட்டகை, எடுத்தவாய்நத்தம், சின்னசேலம், கள்ளக்குறிச்சி	25,000/-
7.	என்.அகமது கபீர், புதுவலசை, மண்டபம், இராமநாதபுரம் மாவட்டம்.	25,000/-
8.	எம்.பொன்னுச்சாமி, வார்டு19, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.	25,000/-
	மொத்தம்	ரூ.2,00,000/-

பல ஆண்டு காலமாக சொல்லப்பட்டு வரும்

நந்தன் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் மு.பெ.கிரி கேள்வி

சென்னை, ஜன.17-

சட்டப்பேரவையில் செங்கம் தொகுதி கழக உறுப்பினர் மு.பெ.கிரி எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் துரைமுருகன் அளித்த பதிலும் வருமாறு:-

மு.பெ.கிரி: செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டு செய்யாறு தொடங்குகிறது, தென்பெண்ணை யாறும் ஓடுகிறது. சாத்தனூர் அணையில் தற்போது பெய்த மழையில் பெருவெள்ளம் வந்தால் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. நான் பிறந்த காலத்திற்கு முன்பிருந்தே, நந்தன் கால்வாய்த் திட்டம் தொடங்கப்படுமென்று சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்காக, சமீபத்திலே 23 ஏரிகளுக்கு தண்ணீர் தருவதற்காக ஒரு திட்ட அறிக்கை ஒன்று தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதை இந்த ஆண்டு செயல்படுத்தித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் துரைமுருகன்: பொதுவாக, நான் எதிர்க்கட்சியில் இருக்கிறபோதும், இந்த மாதிரி கேள்விகளை கேட்கிறபோது, அந்த ஊர் பெயர்களை எல்லாம் கடகடவென சொல்வோம். ஏன் என்றால், அப்போது தான் தொகுதி மக்களிடம் சொல்லும்போது, உங்க ஊர் பற்றி பேசியிருக்கிறேன், கேட்டிருக்கிறேன் என்று சொல்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அதனால், என்னைப் பொறுத்த வரையில், அப்படி கேட்கின்றவர்களுக்கு இல்லை என்று சொல்லி, அமைச்சர் இல்லையென்று சொல்லி விட்டார் என்று சொல்வதைவிட, கவனிக்கிறேன், முன்னுரிமை தருகிறேன் என்று சொன்னால், நான் கேட்டேன்; முன்னுரிமை அடிப்படையில் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று தொகுதி மக்களிடம் சொல்ல முடியும். ஆகையினால், கூடுமான வரையில், positive ஆகவே தான் நான் பதில் சொல்லிக்கொண்டு வருகிறேன். ஏன் என்றால், உங்களுடைய நிலைமை, பல ஆண்டுகாலம் நான் அங்கிருந்தவன் என்கிற முறையில் எனக்கு தெரியும். உறுப்பினர் கிரி அவர்கள் தெரிவித்த நத்தன் கால்வாய், அன்னியூர் வழியாக பனமரத்து ஏரி வழியாக அப்படியே சென்றடைந்துவிடும். உறுப்பினர் செங்கம் தொகுதி தானே?

மு.பெ.கிரி: நந்தன் கால்வாய் திருவண்ணாமலை மாவட்டம், சமுத்திரம் ஏரியில் join ஆகிறது.

அமைச்சர் துரைமுருகன்: நந்தன் கால்வாய் திட்டம் என்பது நீண்டநெடுங்காலமாக இருக்கின்ற ஒரு கோரிக்கை. நான் 1989ல் பொதுப்பணித்துறை அமைச்சர் பதவியை ஏற்ற போது, கலைஞர் என்னிடத்திலே சொன்னார்; உறுப்பினர் ஏ. கோவிந்தசாமி 1952லே இருந்து நந்தன் கால்வாய்த் திட்டத்தை கேட்டுக்கொண்டே இருப்பார். அதை எப்படியாவது கொஞ்சம் நிறைவேற்றிவிடு என்று தெரிவித்தார்கள். அதற்கு ஒவ்வொரு முறையும் தடங்கல் ஏற்பட்டுக் கொண்டே வரும். ஆனால், எப்படியாவது இந்த முறை நிறைவேற்ற வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறோம். முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

சென்னை மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளரும் சென்னை மாநகராட்சி 117வது வார்டு மாமன்ற உறுப்பினருமான திருமலை பொன்னுரங்கம் ஏற்பாட்டில் தமிழ்ப்புத்தாண்டு பொங்கல் விழாவையொட்டி கழகத் தோழர்களுக்கு புத்தாடை மற்றும் நாள் காட்டியை சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு வழங்கினார். இதில் வட்டச் செயலாளர் எஸ்.சத்தியபெருமாள், எல்.தவமணி உள்ளிட்ட மாவட்ட, பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.